சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

அசல் வழக்கு எண்.700/2024 நாள்- 24.06.2025

**பி.வா.சா.1- ரகுராமராஜா**

**பி.வா.சா.1-ன் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வாதி தரப்பில்**

நான் மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து கூட்டாக நகைக்கடை தொழில் செய்து வந்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முறைப்படி சர்வேயரிடம் பணம் கட்டி சொத்தை அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு சொத்தை அளந்தால் தாவா சொத்தில் வாதியும், தாவா சொத்திற்கு பின்புறம் ஆறுமுகப்பெருமாள் என்பவரும் சுவாதீனத்தில் இருந்ததால் சொத்தினை அளப்பதற்கு வாய்ப்பில்லை என்றும், அதனால் சொத்தின் விஸ்தீரணம் பற்றி தெரிந்து கொள்ளாமலேயே தாவா சொத்தை கிரையம் பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.48 ல் தாவா சொத்தில் வாதியின் தந்தை முனியாண்டி, தாவா சொத்திற்கு பின்புறம் ஆறுமுகப்பெருமாளும், வாடகைதாரர்களாக இருந்து வருகிறார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாடகைதாரர்களை காலி செய்து விட்டு தான் தாவா சொத்தை கிரையம் செய்துகொடுக்கவேண்டும என்று வா.சா.ஆ.48 பொது அதிகார ஆவணத்தில் நிபந்தனைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாதியின் அப்பா முனியாண்டியும், ஆறுமுகபபெருமாளும் தாவா சொத்திலும் அதற்கு பின்னால் உள்ள சொத்திலும் சுவாதீனத்தில் இருந்த படியால் தான் வா.சா.ஆ.48 பொது அதிகார ஆவணத்தில் சுவாதீனம் குறித்து எதுவும் குறிப்பி டப்படாமல் மறைத்து இந்த பொது அதிகார ஆவணத்தை என் அப்பா, அர்ஜீனராஜா, முனியசாமி ஆகிய 3 நபர்களும் சேர்ந்து மோசடியாக உற்பத்தி செய்துள்ளனர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.48 பொது அதிகார ஆவணத்தில் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்க உரிமை வழுங்கப்படாத நிலையில் என் பெயரிலும், என் மனைவி பெயரிலும் உள்ள கிரைய ஆவணங்களில் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக பெயரளவில் குறிப்பிடப்பட்டு கிரைய ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில்வாதியின் அப்பாமுனியாண்டி சுவாதீனத்தில் இருப்பதை மறைத்தும் வா.சா.ஆ.48 பொது அதிகார ஆவணத்தில் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிட்டு கூறாத நிலையில் தாவா சொத்தின் சுவாதீனத்தை என் பெயரிலும், என் மனைவி பெயரிலும் உள்ள கிரைய

ஆவணங்களில் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக பொய்யாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு சொத்தினை கிரையம் வாங்கும் சமயத்தில் சொத்தின் உடைமையை பெற்று தான் கிரையம் முடிப்பேன் என்றால் சரிதான். ஆனால் இந்த தாவா சொத்தைப் பொறுத்து வாதியின் அப்பா தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்ததாலும் கிரைய ஒப்பந்தத்தின் படி அனுபவம் செய்து வந்ததாலும் நாங்கள் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் சுவாதீனத்தை பெற்றுக் கொண்டதாக பெயரளவில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு தாவா சொத்தில் வாதியின் உரிமையை மோசடி செய்வதற்காக பி.வா.சா.ஆ.2 முதல் 5 வரையுள்ள ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 முதல் 5 வரையுள்ள ஆவணங்கள் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டிருந்தது என்று காட்டுவதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.48 பொது அதிகார ஆவணத்தில் 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து கூட்டு உரிமையிலும், கூட்டு அனுபவத்திலும் இருந்து வருகிறோம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.48 பொது அதிகார ஆவணத்தில் வாரிசு அடிப்படையிலும், உயிலின் படியும் 1வது நபருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.48 பொது அதிகார ஆவணத்தில் 2 ,3 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமை முலமும், உரிமையும் இல்லை என்றும், வாதியின் கிரைய ஒப்பந்தத்தின் உரிமையை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக 1முதல் 15 பிரதிவாதிகளும் சேர்ந்து மேற்படி பொது அதிகார ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்தும் அதன் தொடர்ச்சியாக பி.வா.சா.ஆ.2 முதல் 5 கிரைய ஆவணங்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.48 பொது அதிகார ஆவணத்தை எழுதப்படுவதற்கு முன்பு இறந்து போன 1ம் பிரதிவாதியை எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.48 மற்றும் பி.வா.சா.ஆ.2 முதல் 5 கிரைய ஆவணங்கள் பதிவு செய்வதற்கு முன்பாக சொத்தின் உரிமையாளரான இறந்து போன 1ம் பிரதிவாதி தாவா சொத்தைப் பொ்றுத்து என்னென்ன ஆவணங்கள் மற்றும் கிரைய உடன்படிக்கை செய்து கொண்டார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அதனால் வாசாஆ.1ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்துகளை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அந்த சமயத்தில் தெரியாது. வா.சா.ஆ.1யை பொறுத்து நேரடியாக எதுவும் தெரியாத

காரணத்தினால் என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் பாரா 5ல் கூறியுள்ள சங்கதிகள் பொய்யான சங்கதிகள் என்றும், அந்த சாட்சியத்தை நிராகரிக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பத்தை பொறுத்து என்னுடைய சாட்சியத்தில் நேரடியாக தெரியாத விஷயத்தை பற்றி பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றும், அந்த சாட்சியத்தை நிராகரிக்கவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பத்தை பொறுத்து கருத்துரை நிபுணரின் அறிக்கை ஆவணமாக தாக்கல் செய்யாமல் கருத்துரை நிபுணரின் அறிக்கை பற்றி நான் சாட்சியம் அளிப்பதற்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என்றும் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி சுவாதீனத்தில் இருந்து வருவதாலும் தாவா சொத்தை பொறுத்து வாதி இறந்து போன 1ம் பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் மேற்கொண்டதாலும், மேற்படி விவரங்களை தெரிந்து 1 முதல் 4 பிரதிவாதிகள் உதவியுடன் நாங்கள் செய்து கொண்ட வா.சா.ஆ.48 மற்றும் பி.வா.சா.ஆ.2 முதல் 5 ஆவணங்களின் படி நாங்கள் நல்லெண்ண கிரையதாரர்கள் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய நிருபணவாக்குமூலத்தின் 6 வது பாராவில் சொல்லப்பட்டுள்ள பி.வா.சா.2 முதல் 4 ன் கிரைய மறுபயன்கள் குறித்து சம்பந்தப்பட்ட நபர்களை விசாரித்தால் தான் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான். தாவா சொத்தின் வடக்கு பக்கமும், மேற்குபக்கமும் முனியசாமிக்கு சொந்தமான இடத்தில் ஆறுமுகப்பெருமாள் வாடகைக்கு கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். கருத்துரை நிபுணரின் அறிக்கை பற்றி கருத்துரை நிபுணரை விசாரித்தால் தான் கருத்துரை பற்றி உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான். அதனால் அந்த கருத்துரையை பொறுத்து என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் பொறுத்து என் சாட்சியத்தை நிராகரிக்கவேண்டும் என்றால் சரியல்ல நிருபணவாக்குமூலத்தின் பாரா9 ல் தாவா கிரைய உடன்படிக்கையை போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சாட்சியம் அளித்தற்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்திரைத்தாள் போலியானது என்று கண்டறியப்பட்டது சம்பந்தமாக எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ள 13.12.1999 ம் தேதியிட்ட உயில் ஆவணம் என் கைவசம் தான் உள்ளது. அந்த உயில் ஆவணத்தை ஒரு ஆவணமாக நான் தாக்கல் செய்யாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 13.12.1999 ம் தேதியிட்ட உயிலை ஒரு ஆவணமாக நான் தாக்கல் செய்தால் தான் மேற்படி உயில் ஆவணத்தில் யார்யாருக்கு

என்னென்ன உரிமை வழங்கப்பட்டது என்று தெரியவரும் என்றால் சரிதான். உயில் ஆவணத்தை தாக்கல் செய்தால் யார்யாருக்கு என்ன உரிமை வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவரும் என்பதால் அதை ஆவணமாக தாக்கல் செய்யாமல் தவிர்த்து சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ஒருநபர் வாடகைக்கு குடியிருக்கும் பட்சத்தில் அந்த நபரிடம் இருந்து வாடகையை வசூல் செய்யவும், சொத்தினை சுவாதீனம் எடுக்கவும், உடனடியாக சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உண்மையிலேயே இந்த வழக்கின் வாதிகள் என்னுடைய வாடகைதாரர்களாக இருந்திருந்தால் வாடகையை வசூல் செய்வதற்கும், சுவாதீனத்தை எடுப்பதற்கும் நாங்கள் கிரையம் பெற்றதில் இருந்து 2021க்குள் RLTOP. 04/2021 என்ற வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல . வா.சா.ஆ.48, பி.வா.சா.ஆ.2 முதல் 5 வரையுள்ள ஆவணங்கள் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணங்கள் என்றும், அதனால் தான் தாவா சொத்தை பொறுத்து நான் உரிமையாளாராக இல்லாததால் வாதியிடம் இருந்து வாடகையை வசூல் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன வாதி முனியாண்டி RCOP எண்.155/2009 என்ற வழக்கை முனியசாமி மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். RCOP எண்.155/2009 என்ற வழக்கில் முனியாண்டிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் அடிப்படையில் அந்த வழக்கில் இறந்து போன 1ம் வாதி நீதிமன்றத்தில் வைப்பிடு செய்து வந்தார் என்றால் சரிதான். RCOP எண்.155/2009 என்ற வழக்கில் வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று எவ்வித மேல்முறையீடு நாளது தேதி வரை நானோ மற்ற பிரதிவாதிகளோ செய்யவில்லை என்றால் சரிதான். RCOP எண்.155/2009 என்ற வழக்கில் முனியாண்டியை மட்டும் தான் தரப்பினராக சேர்த்துள்ளா் என்றும், சொத்தின் உரிமையாளர் நாங்கள் தான் என்று நானோ மற்ற பிரதிவாதிகளோ எங்களையும் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சாஆ.48 மற்றும் பி.வா.சாஆ.2 முதல் 5 வரையுள்ள ஆவணங்கள் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதால் தான் RCOP எண்.155/2009 என்ற வழக்கில் தரப்பினராக சேர்வதற்கும் மேல்முறையிடு செய்வதற்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் தாவா சொத்தை பொறுத்து இறந்து போன முனியாண்டி கிரைய உடன்பாடு செய்ததது

தெரிந்தே வா.சா.ஆ.48 மற்றும் பி.வா.சா.ஆ.2 முதல் 5 வரையுள்ள ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டு அந்த மோசடி ஆவணங்களின் அடிப்படையில் வாதியின் அப்பாவை தாவா சொத்தில் இருந்து காலி செய்வதற்கும் குற்றவியல் நடவடிக்கையும், இராஜபாளையம் நகராட்சிக்கு பொய் புகார் கொடுத்து வாதிகளை துன்புறுத்தினோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.48 மற்றும் பி.வா.சா.ஆ.2 முதல் 5 வரையுள்ள ஆவணங்கள் மோசடி ஆவணங்கள் குறித்து பொய் புகார் குற்றவியல் நடவடிக்கை குறித்தும் என் அப்பா நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் தெரியவரும் என்றால் என் அப்பா நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதில் இருந்து தவிர்த்து விட்டார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட வா.சா.ஆ.1ன் படி இறந்துபோன முனியசாமி முனியாண்டிக்கு கிரைய ஒப்பந்ததின் படி கிரையம் எழுதிக் கொடுக்கவேண்டும் என்று 05.10.2009 அன்று ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்புக்கு1ம் பிரதிவாதி சார்பில் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். பதில்அறிவிப்பில் உள்ள விவரங்களின் உண்மை தன்மை பற்றி தெரிவதற்கு 1ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும் வரை 1ம் பிரதிவாதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 18.10.2012 அன்று என்னுடைய அப்பா ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை இறந்து போன 1ம் வாதிக்கு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளின் உண்மைத்தன்மை பற்றி என் அப்பா தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.48 மற்றும் பி.வா.சா.ஆ 2 முதல் 5 வரையுள்ள ஆவணங்கள் மற்றும் வா.சா.ஆ.27 சட்டத்திற்கு புறம்பாக வாதியை தாவா சொத்தில் இருந்து வெளியேற்றுவதற்காக பெயரளவில் அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் ஆவணம் இறந்து போன முனியாண்டிக்கும் 1ம் பிரதிவாதி முனியசாமிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை என்றும், பின்னிட்டு 1ம் பிரதிவாதி தன் முடிவினை மாற்றிக் கொண்டு 1ம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து வா.சா.ஆ.1ல் தன்னுடைய பங்கை ஆற்றாமல் தவிர்த்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாசாஆ.1ல் கண்ட தன்னுடைய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தன்னுடைய பங்கினை என் அப்பாவின் தலையிட்டின் பெயரில்தான் வேண்டுமஎன்றே தவிர்த்து வாதியின் கிரைய உடன்படிக்கையை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக வாசாஆ.48 மற்றுட பிவாசாஆ.2 முதல்5 வரையுள்ள ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் நெருங்கிய

உறவினர்கள் என்றும் அதை மறுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் இறந்து போன 1ம் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் வாசாஆ.1ன் படி கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்றும், அது சட்டப்படி செல்லத்ததக்கது என்றும் அதனால் வா.சாஆ.48 மற்றும் பி.வ.சா.ஆ.2 முதல் 5 வரையுள்ள ஆவணங்கள் ஏற்படுத்தபபட்டிருந்தாலும் 1ம் பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால் சட்டப்படி 1 முதல் 15 பிரதிவாதிகள் வாதிகளுக்கு ஆதரவாக கிரைய ஆவணங்கள் எழுதிக் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் கிரைய உடன்படிக்கை செய்து கொண்டதால் சட்டப்படி இந்த வழக்கில் வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.